இதழ்-92

01.02.2026



பல்சுவை மின்னிதழ்

# பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

**ஆசிரியர்**
ச.சந்தோஷன்

**இணை ஆசிரியர்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**செய்தியியலாளர்**
ச.மதுஷா

**வடிவமைப்பாளர்**
ர.அபிரா
வ. குணநீதன்

**திறனாய்வாளர்**
கு.கீர்த்தனன்


# இவ்விதழில் துமித்தவை....


03 ஆலயங்களில் ஞான வேள்விகள் வளர்க்கப்பட வேண்டும்

08 பட்டுப்போகவில்லை அந்த தென்னை

15 செம்மொழியான தமிழ்மொழி

19 கண்ணீரில் கரையும் இளமை: இலங்கையில் தற்கொலைகளுக்குப் பிந்தைய குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூக உறவுகளின் துயரம்.

26 யாழ். மாவட்டத்தில் போதைப் பொருளின் தாக்கம் சிறுவர்களையும் பாதித்துள்ளது

29 பசிப்பிணி போக்கிய மணிமேகலை

32 எமது நாட்டுப்புறப் பாடலுக்காக தேசிய விருது வென்றார் இசைக் கலைஞர் பத்மயன்

34 தனிமை – நவீன சமூகத்தின் மறைமுக நோய்

40 தேசிய அணிக்கான கதவுகளை பலமாகத் தட்டும் இளம் சிங்கம் சாருஜன்





வாசகர்களுக்கு
காதலர் தின நல்வாழ்த்துக்கள்

ஆசிரியர் பதிவு

# ஆலயங்களில் ஞான வேள்விகள் வளர்க்கப்பட வேண்டும்

இலங்கைத் திருநாட்டின் சைவ சமயத்தின் ஆன்மீக வரலாறு என்பது வெறும் வழிபாட்டு முறைகளால் ஆனது மட்டுமல்ல அது அறிவார்ந்த தேடல்களாலும், நாவன்மை மிக்க சான்றோர்களின் வழிகாட்டல்களாலும் செதுக்கப்பட்டது. "வாக்கினாலே உலகை வெல்லலாம்" என்பதற்கு இணங்க, ஈழத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்ததில் சொற்பொழிவுகளுக்கும் பிரசங்கங்களுக்கும் பெரும் பங்கு உண்டு. ஆனால், இன்றைய நவீன யுகத்தில் ஆலயங்களில் இத்தகைய ஆன்மீகச் சொற்பொழிவுகள் குறைந்து வருவது ஆழ்ந்த கவலைக்குரிய ஒரு போக்காக மாறியுள்ளது.

ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில், அந்நிய மதமாற்றக் கொள்கைகள் தீவிரமாக இருந்தபோது, அதற்கு அறிவுப்பூர்வமான முட்டுக்கட்டை போட்டவர் ஈழத்துச் சைவத்தமிழ் உலகம் ஈன்றெடுத்த ஆறுமுக நாவலர் பெருமான்.



வெறும் பக்திப் பரவசமாக மட்டும் இல்லாமல், தர்க்க ரீதியாகவும் சாத்திர ரீதியாகவும் அவர் நிகழ்த்திய பிரசங்கங்கள் ஈழத்து மண்ணில் ஒரு மாபெரும் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்தின. கல்வியையும் ஆன்மீகத்தையும் இணைத்ததன் மூலம் அடுத்த தலைமுறையை அறிவு ஆயுதம் ஏந்தச் செய்தார்.

ஈழத்து ஆலயப் பண்பாட்டில் ஒரு காலத்தில் “சின்ன மேளம்” எனப்படும் கலை வடிவம் பக்தியை விடக் கேளிக்கைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தபோது, அது ஆலயத் திருவிழாக்களின் ஆன்மீக நோக்கத்தையே திசைதிருப்பியது. ஆலய முன்றில்கள் மெய்ஞ்ஞானப் பேச்சுகளால் நிறைய வேண்டிய தருணத்தில், வெறும் ஆடல் பாடல்களால் நிரம்பியிருந்த அந்த இருண்ட காலத்தில், ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் “துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள். தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் தனது நாவன்மையால், கலைகளின் பெயரால் புகுந்த தேவையற்ற ஆக்கிரமிப்புகளைத் துணிச்சலுடன் எதிர்த்தார். ஈழத்தின் ஆலயங்கள் எங்கும் சைவத் தமிழின் பெருமையையும், பக்தி இலக்கியங்களின் சாரத்தையும் தனது கனிவான, அதேசமயம் வலிமையான சொற்பொழிவுகளால் பரப்பினார். அவரது சொல்லாற்றலுக்குக் கட்டுப்பட்டு, வெறும் வேடிக்கை நிகழ்ச்சிகளாக இருந்த திருவிழாக்கள், ஞானம் பெறும் பாசறைகளாக மாறின. பக்தர்களின் கவனம் மேடை அலங்காரங்களில் இருந்து மாறி, இறைவனின் தத்துவங்களை நோக்கியும், சைவ சித்தாந்தத்தின் நுட்பங்களை நோக்கியும் திரும்பியது. ஒரு பெண்ணாக, பெரும் அறிஞர்களுக்கே சவால் விடும் வகையில் அவர் நிகழ்த்திய இந்த ஆன்மீகப் புரட்சி, ஆலயங்களில் சொற்பொழிவு எனும் ஒரு பெரும் மரபை மீண்டும் உயிர்ப்பித்தது.

இன்று இத்தொடர்ச்சியைத் தாங்கி நிற்பவர்களில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் முதன்மையானவர். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக்கட்டளை ஊடாக அவர் செய்யும் வியக்கத்தக்க பணிகளுக்குப் பின்னால் இருப்பது அவரது வசீகரமான பேச்சாற்றல். இறை அருளால் வாய்க்கப்பட்ட அதே நாவன்மையும், தெளிவான சிந்தனையும் கொண்ட அவர், நற்பண்புகள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கச் சொற்பொழிவுகளே சிறந்த கருவி என்பதை மெய்ப்பித்தார். ஆறு. திருமுருகன் அவர்களின் உரைகள் வெறும் புராணக் கதைகளாக இல்லாமல், அவை வாழ்வியல் நெறிகளாகவும், சமூகப் பணிக்கான

உந்துசக்தியாகவும் அமைந்தன. அவர் பேச்சைக் கேட்கக் கூடிய மக்கள் கூட்டமே, பின்னர் அந்த அறப்பணிகளுக்குப் பொருள் தந்துதவும் தொண்டர்களாக மாறினார்கள்.

அதேபோல, கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் இலக்கியத்தையும் ஆன்மீகத்தையும் இணைத்து, இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகிறார். இவர்களின் பேச்சுகள் மக்களைச் சிந்திக்கவும், அறப்பணிகளில் ஈடுபடவும் தூண்டுகின்றன.

இவ்வளவு பெருமைமிக்க பாரம்பரியம் இருந்தும், இன்று ஆலயங்களில் சொற்பொழிவுகள் குறைந்து வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன:

* தொழில்நுட்ப ஆதிக்கம்: சமூக ஊடகங்கள் மற்றும் கைபேசிகளின் வருகையால் மக்களின் கவனக்குவிப்பு (Attention span) குறைந்துவிட்டது. நீண்ட நேரச் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கான பொறுமை அருகி வருகின்றது.

* சடங்கு ரீதியான அணுகுமுறை: ஆலயங்கள் வெறும் சடங்குகள் நடக்கும் இடங்களாக மட்டும் சுருங்கிவிட்டன. இறைவனைப் பற்றிய தத்துவங்களை விட, கிரியைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் அறிவார்ந்த உரையாடல்களுக்கு இடமில்லாமல் போகிறது.

* பயிற்சியின்மை: பழைய காலத்தைப் போல முறையான தமிழ் இலக்கியப் பயிற்சியோ, சைவ சித்தாந்தப் பயிற்சியோ உடைய இளைய பேச்சாளர்கள் உருவாகவில்லை.

நவீனத் தொழில்நுட்ப வளர்ச்சியும், சமூக வலைதளங்களின் ஆக்கிரமிப்பும் பக்தியின் வடிவத்தைச் சுருக்கிவிட்டன. ஆழமான சிந்திக்கும் ஆற்றலை மழுங்கடிக்கும் வகையில் இன்று பல ஆலயத் திருவிழாக்கள் மீண்டும் சத்தம் மிகுந்த இசை நிகழ்ச்சிகளாகவும், வெற்றுப் பகட்டுகளாகவும் மாறி வருகின்றன. மணிக்கணக்கில் அமர்ந்து சொற்பொழிவுகளைக் கேட்டுத் தங்களைத் தாங்களே செதுக்கிக் கொண்ட ஒரு தலைமுறை மறைந்து, சில நிமிட "ரீல்ஸ்" (Reels) கலாச்சாரத்தில் மூழ்கியிருக்கும் ஒரு தலைமுறை உருவாகியுள்ளது. இதன் விளைவாக, ஆலய நிர்வாகங்கள் மீண்டும் சொற்பொழிவாளர்களைப் புறக்கணித்து, கூட்டத்தைக்



கூட்டுவதற்காகப் புகழ்பெற்ற இசைக்கலைஞர்களுக்கும், கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கும் முன்னுரிமை அளிக்கின்றன.

இந்தத் தேக்க நிலை என்பது வெறும் கலை சார்ந்த மாற்றம் மட்டுமல்ல இது ஒரு சமூகத்தின் அறிவு வீழ்ச்சியின் அறிகுறியாகும். தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரும், ஆறு. திருமுருகன் அவர்களும், கம்ப வாரிதி போன்றோரும் கட்டிக்காத்த அந்தப் பண்பாட்டு விழுமியங்கள் மீண்டும் சிதைவதைத் தடுக்க வேண்டுமானால், ஆலயங்கள் மீண்டும் போதனை மையங்களாக மாற வேண்டும். வெறும் சடங்குகளுக்காகவும், வேடிக்கைக்காகவும் செலவிடப்படும் நேரம், மெய்யறிவைத் தேடுவதற்காகச் செலவிடப்பட வேண்டும். பண்பாட்டுச் சீரழிவுகள் மலிந்து வரும் இந்த யுகத்தில், அடுத்த தலைமுறைக்கு முறையான ஆன்மீகக் கல்வியைச் சேர்க்காவிடில், ஆலயங்கள் அவற்றின் உயிரோட்டத்தை இழந்து வெறும் நினைவுச் சின்னங்களாகவே எஞ்சும். எனவே, நாவன்மையுள்ள அறிஞர்களைக் கொண்டு மீண்டும் ஆலய முன்றில்களில் ஞான வேள்விகள் வளர்க்கப்படுவதே காலத்தின் கட்டாயமாகும்.

இந்தப் பாரம்பரியம் சிதைந்துவிடாமல் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல நாம் அடிப்படையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்:

1. ஆன்மீகப் பேச்சுப் பயிற்சிக் கூடங்கள்:
பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் வெறும் பேச்சுப் போட்டிகளோடு நிறுத்திக் கொள்ளாமல், “சொற்பொழிவுப் பயிற்சிக் கூடங்களை” உருவாக்க வேண்டும். சிறந்த ஆளுமைகளைக் கொண்டு இளம் தலைமுறையினருக்கு நுணுக்கங்களைக் கற்பிக்க வேண்டும்.

2. நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்:
சொற்பொழிவுகளை மூன்று மணிநேர உரைகளாக மட்டும் வைக்காமல், அவற்றைச் சிறிய காணொளிகளாக (Shorts/ Reels) மாற்றி நவீனத் தலைமுறையைச் சென்றடையச் செய்ய வேண்டும். தொழில்நுட்பம் ஒரு தடையாக இல்லாமல், கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

3. ஆலயங்களில் அறநெறிப் பாடசாலைகளைப் பலப்படுத்தல்:
ஒவ்வொரு ஆலயமும் வெறும் பூசையோடு நின்றுவிடாமல், வாராந்தம் ஒரு மணிநேரம் தெளிவான சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்ய வேண்டும். அதில் சிறுவர்களையும் இளைஞர்களையும் பேச ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்குப் பரிசுகளையும் அங்கீகாரங்களையும் வழங்க வேண்டும்.

4. தத்துவார்த்த விளக்கங்கள்:
இன்றைய இளைஞர்கள் "ஏன்? எதற்கு?" என்று கேள்வி கேட்பவர்கள். எனவே, புராணக் கதைகளைத் தாண்டி, அறிவியலோடும் வாழ்வியலோடும் இணைந்த தத்துவார்த்த சொற்பொழிவுகளை வழங்க வேண்டும்.

5. சமூகப் பணியுடன் இணைந்த ஆன்மீகம்:
அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் மற்றும் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் காட்டிய வழியில், சொற்பொழிவுகள் வெறும் காதுகளுக்கு விருந்தாக இல்லாமல், சமூக மேம்பாட்டை ஊக்கப்படுத்துவதாக அமைய வேண்டும். அப்போதுதான் மக்கள் சொற்பொழிவுகளின் முக்கியத்துவத்தை உணர்வார்கள்.

ஆறுமுக நாவலர் பெருமான் ஏற்றிய அறிவுச்சுடர், தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரால் கருணை ஒளியாகப் பரவி, இன்று கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் கம்பவாரிதி ஜெயராஜ் போன்றோரால் கட்டிக்காக்கப்பட்டு வருகிறது. இந்தப் பாரம்பரியம் ஒரு தொடர் ஓட்டம் போன்றது. இதில் ஓட்டம் நின்றுவிடக் கூடாது. ஆலயங்கள் வெறும் ஆன்மீக வழிபாடுகள் மட்டும் நடைபெறும் இடங்களாக இல்லாமல், அறிவை வளர்க்கும் கலைக்கூடங்களாக மாற வேண்டும். நாவன்மை மிக்க இளைஞர்களை உருவாக்குவது வெறும் சமயப்பணி மட்டுமல்ல் அது எமது அடையாளத்தைக் காக்கும் வரலாற்றுப் பணியுமாகும். அடுத்த தலைமுறையினரின் கைகளில் இந்தப் பெருமையை ஒப்படைக்க, நாமும் எம்மை மாற்றிக்கொண்டு அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



# பட்டுப்போகவில்லை அந்த தென்னை

ஒரு பயண நடுத் தேநீருக்காக வாகனம் நிறுத்தப்பட்ட நேரமது. அந்த நீண்ட பயணத் தவணைகளின் இடையில் ஒரு தேநீர் தேவை என்று எனக்கும் பட்டது. இயற்கை விசாலமாய் சூழ்ந்திருந்த அந்த கிராமத்துக் கடையின் வாசமும் இசையும் கூட என்னை வாவென்று அழைத்தது. பேருந்திலிருந்து இறங்கினேன். கடைக்குள் நுழைந்து ஒரு தேநீர் குவளையை கையில் வாங்கிக்கொண்டு தனியான கதிரை ஒன்றில் போய் அமர்ந்தேன்.

அலைபேசி அலம்பல்களை பார்க்க போதிய இணையவசதியும் அவ்விடத்தில் இருக்கவில்லை. ஆனால் அலைபேசியை தவிர வேறு யாரையும், எதையும் பார்ப்பதற்கும் பிடிக்கவில்லை.

வேறு வழியில்லை. தொலைபேசியில் சேமித்து வைக்கப்பட்ட புகைப்படக் களஞ்சியத்திற்குள் நுழைந்தேன். மெல்ல மெல்ல தட்டிக் கொண்டு செல்கையில் ஓரிடத்தில் கண்ணும் விரலும் அசைய மறுத்து நின்றது.

இதோ நீங்கள் இந்த அட்டையில் கண்ட அதே புகைப்படம் தான். இது எங்கேயோ தரவிறக்கம் செய்து வைத்ததல்ல. இதே தொலைபேசியின் வில்லைக்கண்களால் காணப்பட்ட ஒரு தரிசனம் தான் இது. அந்தக்காட்சியை சேமித்த நொடிகள் நினைவில் ஊறத்தொடங்கியது. இந்த புகைப்படத்தில் நீங்கள் காணாத சில காட்சிகள் என் நினைவில் சேமிக்கப்பட்டுள்ளன.

நான் சொன்னது போல் இந்தக்காட்சியை கண்டது என் அலைபேசியின் கண்கள் தான். ஆனால் பதிவு செய்தது என் கைகளல்ல. 'எனக்கென பிறந்த கைகள்' அன்றையநாளில் - அந்தநேரத்தில் அதுதான் உண்மை. அப்படியென்றால் இன்றைய உண்மை என்ன?

உண்மைகள் யாருக்கு வேண்டும்? நினைவுகளில் இன்பத்தில் மூழ்கும் வேளையில் உண்மைகளை பற்றிய எண்ணத்தை வர அனுமதிக்கக்கூடாது. நினைவுகள் இன்புறுத்தும். உண்மைகள் துன்புறுத்தும். உண்மையை தூரந்தள்ளிவிட்டு சில நினைவுகளை மீட்க மனம் விரும்புகிறது..

“காதல் கிளிகள் இரண்டு ...” பாடலை முனுமுனுத்துக் கொண்டே அன்று இந்தக்காட்சியை பதிவு செய்தது 'அவள்'தான். அவள் சார்ந்த எல்லா புகைப்படமும் என் அலைபேசியில் எப்போதோ அழிக்கப்பட்டு விட்டது. ஆனால் இந்தப்புகைப்படம் மட்டும் எப்படியோ தப்பித்துவிட்டது.

எந்த கோபத்தின் உச்சத்திலும், எந்த சோகத்தின் ஆழத்திலும் கூட அவள் சார்ந்த நினைவுகளை நிர்மூலம் செய்யமுடியாமல் எங்கோ ஒரு புள்ளி மிச்சம் வைக்கப்பட்டிருந்தது இந்த புகைப்படமாய்... அந்தப்புள்ளி இன்று இந்தப்பயணநடுவில் என் பார்வையில் பட்டு அன்று போல் மீண்டும் என்னை உருக்குலைக்க வைக்க எத்தனிக்கிறது. இப்படி ஒருநாள் நிகழலாம் என்று நீங்கள் என்னிடம் நேற்று சொல்லியிருந்தால் கூட நம்பியிருக்க மாட்டேன். மனம் எப்போதோ பக்குவப்பட்டுவிட்டதாக நினைத்தேன்.. ஆனால் மனம் பொல்லாதது.

சரி என்னை விடுங்கள். அந்த 'அவள் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லையே. சொல்லவும் மாட்டேன். 'சொல்லாமல் எங்களிற்கு என்ன புரியும் ?' என்று கேட்கிறீர்களா? சொன்னால் மட்டும் புரிந்து கொள்ள முடியுமா அவளை .. புரியாத புதிர்..

அவள் ஓர் இராட்சசி..அவளை அப்படித்தான் அறிமுகப்படுத்த வேண்டும். கோயிலுக்குப் போய் கடவுளைப்பார்த்தால் கையெடுத்துக் கும்பிடவேண்டும் போல் தோன்றும்.. ஆனால் ஓர் இராட்சசியை பார்த்தால் என்ன தோன்றும்? பார்க்கவே பயமாக இருக்கும்.. ஆனாலும் பார்க்காமல் இருப்போமோ.. ஒரு கண்ணை மூடி இன்னொரு கண்ணால் என்றாலும் பார்த்தே ஆகவேண்டும்

என்று தோன்றுமல்லவா? அவளும் அப்படித்தான்.. அவளை பார்ப்பதென்றாலே பயம்.. ஆனாலும் பார்க்காமல் இருக்க முடியாது.

ஒவ்வொரு முறையும் பயத்தின் உச்சகட்டம்தான். ஒவ்வொரு சந்திப்பும் குலை நடுக்கம் தான். ஆனாலும் அவளிடம் ஒரு கனிவு இருப்பதாக எப்படியோ நம்பினேன். தொடக்கம் எங்கு? முடிவு என்ன? இந்தக் கதைகளே வேண்டாம்... ஒன்று மட்டும் சொல்கிறேன். என் நினைவில் தற்சமயம் ததும்புகிற கதை.. இந்த புகைப்படம் எடுக்கப்பட்ட அந்த நாள் காட்சிகள்...

அந்த ஒரு நாள் அவள் கொஞ்சம் வேளைக்கு வந்து விட்டாள். அதாவது நான் வருவதற்கு முன்னால். இத்தனை நாள் சந்திப்புக்களிலும் அந்த ஒருநாள் மட்டுந்தான் அப்படி நிகழ்ந்திருந்தது.

நான் போய் நின்றதும் என் பக்கம் திரும்பவில்லை. கன நேரம் காத்திருந்த களைப்பு. களைப்பு மேலெழுந்து பொங்கிய கோபம்.. எல்லாம் சேர்ந்து அவள் தலையை திருப்பி வைத்திருந்தன.

ஒரு ஆண் அதிகநேரம் காத்திருப்பதும், ஒரு பெண் அதிகநேரம் காத்திருப்பதும் சமூகத்தின் பார்வையில் ஒன்றல்லதான். எனக்கும் அது புரிந்தது.

கூடவே ஒரு பயமும் இருந்தது.. இல்லை என்று சொல்லவில்லை. ஆனாலும் அதை காட்டிக் கொள்ளாமல் பயப்படாத மாதிரி நடிக்கின்ற வீரம் என்னிடம் கொஞ்சம், இல்லை, கனக்கவே இருந்தது..

என் வீரத்தோடு அமைதியாகவே நின்றேன். பிடிவாதக்காரி.. கிட்டத்தட்ட ஐந்து நிமிடம் கடந்திருக்கும். தலை திருப்பவேயில்லை.

இப்படி நான் முன்னதாக வந்து அதிக நேரம் காத்திருந்த பொழுதுகளில், அவள் வரும்போதே ஏதேதோ பேசிக்கொண்டு தன் குற்றத்தை திசை திருப்பிக் கொண்டே தான் வருவாள்.. அந்த வல்லமைதான் எனக்கு தெரியாதே.. பெண்ணின் கண்களை பார்த்தாலே வாய் திறக்க முடியாதபடிதானே ஆணினைத்தையே படைத்து வைத்திருக்கிறான் இறைவன்.

சரி இனி என்ன செய்யலாம் என்று ‘வந்து கன நேரம் ஆவிட்டோ..?’

‘ இத கேட்கிறதுக்கே இவ்வளா நேரம்…’
என்றவாறே தலை ஒரு பக்கத்தில் இருந்து இன்னொரு பக்கம் திரும்பியது. இப்போதும் என்பக்கமல்ல.

‘கொஞ்சம் வேலை … .. நேரத்திற்கு வெளிக்கிட்டிட்டன்.. ஆனாலும் இடேல கொஞ்சம் பிந்திட்டுது..’

‘கொஞ்சம்’ என்ற வார்த்தைக்கு மட்டும் அப்படியொரு ‘எதிர்ஒளி’ அவள் கண்களிலிருந்து

‘சரி கொஞ்சம் இல்லை.. கனநேரம் ஆகிட்டு போல தான் கிடக்கு…’

அந்த அமைதி அசையவேயில்லை..

‘ஏதோ இண்டைக்கு ஒருநாள் மட்டும்…‘ சொல்ல வந்துவிட்டேன்.. ஆனால் சொல்ல முடியவில்லை. சுதாரித்து வாயை இறுக்க மூடிக் கொண்டேன்.. ஆனால் சொல்ல வந்தது சென்றடைந்து விட்டது.

‘என்ன?’

விளங்காதது போல் கேட்டாள்?
விளங்கிவிட்டது என்றது அவள் கேட்ட தொனி.

‘ஒண்டுமில்லை’ என் வேகமான பதில்.ஒரு முடிவிற்கு கொண்டுவருவதற்கான என் முயற்சி.

நான் பயந்துவிட்டேன் என்றால்.. அவள் வென்றுவிட்டாள் என்று பொருள் அவள் அகராதியில்.. ஒளித்து வைத்திருந்த வெற்றிச்சிரிப்பு அவளிடமிருந்து கேட்டது..



‘அதாவது நான் இண்டைக்கு ஒருநாள் வெள்ளெண்ண வந்துபோட்டு கதைக்குறன்.. அப்படித்தானே…’
சிரித்த குரல் மாறாமல்

கேட்டாள். 'அப்பிடியில்லை...' சொல்லும் போது அவள் முகத்தில் சிரிப்பு வற்றாமல் இருந்ததை கவனித்துவிட்டு 'அப்படித்தான்' என்றேன்.

சிரிப்பு வற்றவில்லை... வென்றுவிட்டேன் நானும்.. இப்படித்தான் தொடங்கும் எங்கள் ஒவ்வொரு சந்திப்புக்களும்.....

ஒவ்வொரு சந்திப்புக்கும் முன்னும் எத்தனை ஒத்திகை பார்த்தாலும் அவளிடம் தோற்றுப்போகும் வேடிக்கை என் வாடிக்கையானது. உரிமைகளும் சுதந்திரமும் வேண்டுமென போராடிய மனம் அடிமைத்தனத்தை விரும்பத் தொடங்குவது காதலில் தானே..

இறைவனே அவதாரமெடுத்து வந்தும் அழிக்கமுடியாத 'நான்' என்ற எண்ணத்தை காதல் வெகு இலகுவாக அழித்துவிடுகிறது. அப்படியே வீதியில் நடந்து கொண்டு போனோம். ஒரு தொலைவில் தான் இந்த புகைப்படத்தில் தெரியும் இந்த தென்னைமரத்தை பார்த்தோம். தினமும் அது அங்குதான் இருந்தது. ஆனால் அன்றுதான் அதுவரை கண்டு அறியாதது கண்டோம்..

'அங்க அந்த தென்னமரத்த ஒருக்க பாரன்..' என்றாள்..

'தென்னை மரமா அது?? எப்பயோ செத்துப் போன மரம்... '

'உனக்கு இரசனை எண்டதே அவ்வளாந்தான்..'

'சரி சொல்லுங்க இரசிகை.. அந்த தென்னை மரத்தில் அப்படி என்ன தெரிகிறது?'

'ஒண்டுமில்ல .. அந்த பொந்த குடையிற கிளி இரண்டையும் பாரன்..... மரத்தை கொத்துறதும் சண்டை பிடிக்கிறதும்... '

'ஓமோம் ... நல்லத்தான் இருக்கு..'
உப்பு சப்பில்லாத என் பதில் அவள் கோபத்தை சீண்டும் நோக்கில் தான்.. அருகில் கிடந்த புல்லொன்றை பிடுங்கினாள். சொல்லால் அடி வாங்கி திருந்தாதவனை இனி புல்லால் அடிப்பதே வழி என்று நினைத்ததாள் போலும்..

புல்லிற்கு பயந்து நானும் ஓடினேன். அவளும் அந்த புல்லோடு துரத்திக் கொண்டு வந்தாள். அந்த தென்னை மரத்திற்கு அருகில்

தான் வந்தேன்... 'நில்லு... நில்லு...அதுகளுக்கு கிட்ட போகாத.. பாவம் பயத்தில ஓடிடுங்கள்..'

'சரி .... சரி' என்று அதே இடத்தில் நின்றேன்.. ஓடி வந்தவள்.. கிட்ட வந்து அந்த கிளிகளை கண்டு அமைதியாய் நின்றாள்.. உற்றுப் பார்த்தாள்.

"செத்துப் போனதாய் நீ சொன்ன தென்னைக்கு அந்த கிளிகள் உயிர் கொடுத்துக் கொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா?" என்றாள்.

"சூனியக்கார கிளிகளா இருக்குமோ.. உயிர்ப்பிக்க எல்லாம் தெரிஞ்சிருக்கு.." என்றேன். சிரித்தாள்.

வாயில் ஒரு பாடலை முனுமுனுக்கத் தொடங்கினாள்..
"காதல் கிளிகள் ரெண்டு ஜாடை பேசக்கண்டு
ஏதேதோ எண்ணம் என் நெஞ்சில் உதிக்கும்
நானும் நீயும் சேர்ந்து ராகம் பாடும்போது
நீரோடை போல என் நெஞ்சம் இனிக்கும்
இனிய பருவமுள்ள இளங்குயிலே...."

ஓய், என்று நான் தட்டியதும் சுயநினைவு கொண்டவளாய்.. 'உண்ட போன ஒருக்க தாவன்' என்றாள்..



'என்னத்துக்கு?'

'ஏன் சொல்லணுமா??'

'வேண்டாம் பிடி'
கொடுத்தேன்.

அப்படி அன்று என் போனில் எடுத்த காட்சி தான் இன்று உங்கள் கண்களால் நீங்கள் காண்பது.

எடுத்த படத்தையே கனநேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.. போனை பார்த்துக் கொண்டே
'ஏய்...... நான் ஒண்டு சொல்லவா..'

'வேண்டாம்' என்றேன்...

என் முகத்தை நிமிர்ந்து பார்த்து சிரித்தாள்..

'நீ... சொல்லத்தான் வேண்டுமென்றல்ல..'என்றேன்..

சிரித்துக்கொண்டே அணைத்துக் கொண்டாள்..

தன்னந்தனியாக கதிரையில் அமர்ந்து போனைப் பார்த்துக்கொண்டு தேநீர் பருகும் நானும் சிரித்துக் கொண்டிருந்தேன்.. என்னைப் பார்க்கும் சகபயணிகளிற்கு நான் வேடிக்கையாய் கூட தெரியலாம். அதற்காக இந்த நிமிடத்து என் சிரிப்பை ஒளிக்க முடியுமா? எதற்கு ஒளிப்பதென இன்னும் அகலமாக சிரித்தேன்...

'லவ் பண்ணுங்க சேர்..' வாழ்வு நல்லா இருக்குமோ, இருக்காதோ தெரியாது .. ஆனால் அந்த நினைவுகளை மீட்டிப்பார்க்கிற ஒவ்வொரு தருணங்களும் ஆயுள் முழுதும் இனிமையாக தான் இருக்கும்...
நினைத்துப் பாருங்கள்...

**எல்லோருக்கும் காதலர்தின வாழ்த்துகள்..**






# செம்மொழியான தமிழ்மொழி

நடராசா கோபிராம்
உளவியல்சிறப்புக்கலைமாணவன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உலகின் மிகப் பழமையான மொழிகளில் மூத்ததும், முதன்மையானதும் மொழியாக விளங்குவது தமிழ் மொழி. உலகில் உயிருடன் வாழும் மொழிகளில் 2000 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியான இலக்கிய மொழிநடை கொண்ட ஒரே மொழி தமிழ் மொழியாகும். செம்மை சார் இலக்கியத்தை உடைய மொழியே செம்மொழியாகும். செம்மொழி என்றால் உயர்ந்த தரம் கொண்ட மொழி எனவும் பொருள்படும். சமீபத்திய ஆய்வுகளின் அடிப்படையில் உலகில் கிட்டத்தட்ட 7000 மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் 2000 அளவு மொழிகள் வழக்குழிந்து விட்டன. யுனஸ்கோ கருத்துப்படி உலகில் உள்ள மொழிகளில் 40 வீதம் (சுமார் 2800) மொழிகள் அளவில் அழியும் ஆபத்துக்கள் உள்ளதாக கூறப்படுகின்றது. சிறுபான்மை குழுக்கள் பேசும் பல மொழிகள் புதிய தலைமுறையால் கற்றுக்கொள்ளப்படாததால் அடுத்த நூறு ஆண்டுகளில் பல மொழிகள் மறைந்து போகும் அபாயம் உள்ளது. செம்மொழி என்ற அந்தஸ்தில் 13 மொழிகளை காணப்படுகின்றன. அதில் செம்மொழி என்ற தகமை கொண்ட தமிழ் மொழி தொடர்ச்சியாக பேசப்படும் மற்றும் எழுத்து வடிவத்தில் அமைந்திருக்கும் மிகப் பழமையான மொழி என ஆய்வாளர்களால்

கருதப்படும் மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது. ஒரு மொழி செம்மொழி என்ற தகமை கொண்டிருக்க வேண்டுமானால் பின்வரும் தகமைகள் அதற்கு அவசியம். அந்த வகையில்,

- ✓ அந்த மொழி பழமையானதாக இருத்தல் வேண்டும்.
- ✓ வேற்று மொழியிலிருந்து பிரிந்து காணப்படாததாகவும் தனித்த மரபுடையதாகவும் இருத்தல்
- ✓ தொடர்ச்சி மற்றும் இலக்கிய பாரம்பரியம் கொண்டிருத்தல.
- ✓ அந்த மொழியின் இலக்கியங்களில் சிலவேனும் உலக பண்பாட்டின் செல்வாக்கை செலுத்துகின்றனவாக இருத்தல்,
- ✓ தனித்துவம் கெடாதபடி காலத்திற்கு ஏற்ப மாற்றங்களுடன் தன்னை தகவமைத்துக் கொள்ளும் திறன் இருக்க வேண்டும்

1887ம் ஆண்டு சூரிய நாராயண சாஸ்திரி தமிழ் ஒரு செம்மொழி என பிரகடனம் செய்தார். 2004 ஆம் ஆண்டு இந்திய அரசு தமிழ் மொழி ஒரு செம்மொழி என அறிவித்தது. இதனைத் தொடர்ந்து சங்க இலக்கியங்கள் பதினெண்மேல்கணக்கு நூல்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்கள் செவ்விய இலக்கியமாக கொள்ளப்பட்டன.

தமிழில் செவ்வியல் சிறப்புகளில் பிரதானமாக விளங்குவது அதன் தொன்மை ஆகும். உலகளாவிய ரீதியில் தமிழ் மொழியானது ஆய்வுகளின் அடிப்படையில் அதன் வரலாற்றையும் பாரம்பரியத்தையும் இன்று வரை உலக மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்திய வண்ணம் உள்ளது. அந்த வகையில் இன்று வரை நடைபெற்று வரும் கீழடி ஆய்வுகள் சங்க காலம் மற்றும் அதற்கு முன்னும் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை அதாவது அவர்களின் தொழில், வீடமைப்பு, வாழ்வியல் அம்சங்கள், நீர் பாசனம், கட்டிடக்கலை முதலான பல்வேறுபட்டு விடயங்களை காட்டுவதுடன் அங்கு காணப்படும் கல்வெட்டுக்கள் மற்றும் படிமங்கள் என்பன ஆதாரங்களாக நிரூபிக்கப்படுகின்றன. வெளிநாடுகளுடன் வணிகங்கள், தொழில்கள் செய்தல் தொடர்பான கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன இலங்கை - மலேசியா - சிங்கப்பூர் ஆகிய நாடுகளில், அரச கரும மொழியாக தமிழ் பயன்படுத்தப்படுவது அதன் தொன்மையையும் தொடர்ச்சியையும் பறைசாற்றுகின்றது. Diadpora Studies Journal ஆனது உலகில் செயலில் இருக்கும் மொழி என தமிழை அழைக்கின்றது.

உளவியல் மற்றும் சமூக நோக்கில் தமிழை ஆராயும் போது மொழி ஒரு சமூகத்தின் மன அமைப்பையும் பண்பாட்டையும் வடிவமைக்கின்றது. தமிழ் செம்மொழி என்ற அடையாளம் தமிழர்களின் collective Self - esteem (சமூக - தனிநபர் கூட்டு சுய மரியாதை) உயர்கிறது என "டாக்டர் அன்மைஸ்" என்று ஆய்வாளர் கூறுகிறார். சங்க இலக்கியங்களில் காணப்படும் அறம் மற்றும் புறம் ஆகிய பிரிவுகள் மனித மன உணர்ச்சியை பிரதிபலிக்கின்றன. இது பழைய தமிழ் வாழ்க்கையின் உளவியல் சான்றாகும் என கலாச்சார உளவியல் அடிப்படையில் "பெர்னர" என்பவர் குறிப்பிடுகின்றார். உலகின் முதன்மையான உளவியல் மற்றும் சமூகப் பதிவுகள் கொண்ட ஒரே மொழியான மொழியாக தமிழ் மொழி உள்ளமை இங்கு சுட்டிக்காட்டுத்தக்கது.

தமிழ் இலக்கிய பரப்பில் ஆரம்ப காலமான சங்க காலம் காலம் தொட்டு பிற்காலம் வரை செவ்வியல் பண்பு விரவி உள்ளன. இவ் இலக்கியங்கள் வாழ்வியல், உலகியலை முன்னிறுத்தி காணப்படுவதுடன் இவை ஏனைய மொழிகளில் தோன்றுவதற்கு முன்பு தமிழில் தோன்றியமை என்பது இங்கே சிறப்பு கூறியதாக விளங்குகின்றது.

உலகப் பொதுமறை ஆகிய திருக்குறள் வாழ்க்கை நெறிமுறை, பொருளாதார முறை என பல்வேறு பட்ட உலகில் சார்ந்த விடயங்களை கூறும் ஒரு மிக முக்கிய படைப்பு ஆகும் இது இன்று வரை பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமையும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்று. உலக ரீதியான விடயங்களை ருளைநசளயட Psychology தரவுகளை வழங்குவதாக Unescso சங்க இலக்கியங்கள் அடிப்படையாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அடிப்படையில் இயற்கை மற்றும் மனித வாழ்க்கையில் இணைப்பு உலகில் முதன் முதலில் பதிவு செய்யப்பட்டது என ஆராய்ச்சியாளர்கள் மெய்சிலித்து கூறுகின்றனர். இங்கு காணப்படும் கவிதைகள் சுற்றுச்சூழல் உளவியல் (Eco Psychology) சார்ந்து பெரும்பாலும் அமைக்கின்றன எனவும் அவற்றுள் பல்வேறு விதமான மனப்பான்மை நடத்தையும் வாழ்க்கை முறையும் சிறப்பாக விளங்குகின்றன என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்

தமிழ் உலகின் மிக வேகமான டிஜிட்டல் தளங்களில் பரவி பெரும் செம்மொழிகளில் ஒன்றாகும் என Unescso கூறுகின்றது.மொழிகள் பொதுவாக பிறந்து சிறக்கும். சிறந்தே பிறந்த மொழி தமிழ் மொழி.

ஒரு மொழியின் சமூக பயன்பாடு அதிகரிக்கின்ற அளவுக்கே அது வாழும் இந்த வகையில் பார்க்கின்றபோது செம்மொழியான தமிழ் மொழி இன்று வரை இணையம், கல்வி, வணிகம் என பல்வேறு துறைகளிலும் வலுவாக திகழ்கின்றமை இங்கே குறிப்பிடத்தக்கது. இதனால் தமிழை உயிரோடு வாழும் செம்மொழி (living classical language) எனப்போற்றப்படுகிறது.

**'தமிழ் செம்மொழி மட்டுமல்ல,**
**நம் அடையாளம்: நம் உயிர்'**

செம்மையால் செழித்த சொற்களின் தாய்
நெஞ்சை நாலு திசை கொண்டு இணைக்கும் நிறம் தமிழ்.
அம்மா என்ற மென்மை தொடக்கம்
ஆண்டுகள் கடந்தும் அழியாத அழகு அதன் எழுத்தில்.

காலத்தின் கணக்கை மீறும் பரம்பரை
காற்றின் இசையிலும் கூட ஒலிக்கும் மொழி நாம் பேசும் தமிழ்.
உலகம் எங்கும் வாழ்ந்தாலும்
உள்ளம் தளிர்க்க வைக்கும் தாய்மொழி அது.

பாடலாகப் பொங்கும் பாவங்கள் கொண்ட
பனிமலர் போல மென்மையும்,
கடலலை போல வீரமும் சேர்த்த
நம் உயிரின் மூச்சு - தமிழ்.

வேருக்கு வேராய் நின்று
வழித்தோறும் எனை வழிநடத்தும்
எழுத்துக்களில் ஒளிந்திருக்கும்
என்றும் அழியாத பெருமை - செம்மொழித் தமிழ்.





# கண்ணீரில் கரையும் இளமை: இலங்கையில் தற்கொலைகளுக்குப் பிந்தைய குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூக உறவுகளின் துயரம்.

முரளிதரன் ஷாம்பவி
உளவியல் துறை
இரண்டாம் வருடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

இலங்கை, அதன் வளமான கலாச்சாரம் மற்றும் அமைதியான நிலப்பரப்புகளுக்குப் பெயர் பெற்றது என்றாலும், பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத ஒரு ஆழமான சுகாதார மற்றும் சமூக சவாலை எதிர்கொண்டுள்ளது: தற்கொலை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி, சமூக அழுத்தங்கள் மற்றும் போரின் நீண்டகால உளவியல் வடுக்கள் காரணமாக, 2025ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்கள் குறிப்பாக இளம் வயதினரிடையே (15-29) தற்கொலை விகிதம் மீண்டும் கவலைக்கிடமான அளவில் உயர்வதைச் சுட்டிக்காட்டுகின்றன. தற்கொலை என்பது அந்தத் தனிமனிதனோடு முடிந்துபோகும் ஒரு நிகழ்வு அல்ல் அது ஒரு பேரழிவு அலை போலப் பரவி, தற்கொலை செய்துகொண்டவரின் குடும்பம், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூக உறவுகள் மீதும் நிரந்தர உளவியல், சமூகவியல், மற்றும் நிதி சார்ந்த துயரச் சுமையை சுமத்துகிறது.

இந்தக் கட்டுரை, 2025ஆம் ஆண்டின் சமீபத்திய புள்ளிவிவரங்கள் மற்றும் கள ஆய்வுகளின் அடிப்படையில், இலங்கையில் இளையோர் தற்கொலையின் ஆழமான தாக்கத்தையும், இத்துயரத்தின் பிடியில் சிக்கிய குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூக உறவுகள் எதிர்நோக்கும் நீடித்த துன்பத்தையும், அதற்குத் தேவைப்படும் தேசிய அளவிலான தீர்வுகளையும் விரிவாக ஆராய்கிறது.

I. இலங்கை இளையோரின் தற்கொலைச் சுவடு: 2025 புள்ளிவிவரங்களின் அபாயம்

இலங்கையின் தற்கொலை விகிதம் பூச்சிக்கொல்லித் தடைக்குப் பிறகு குறைந்திருந்தாலும், சமீபத்திய பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மையால், மனநலப் பாதிப்புகள் அதிகரித்துள்ளன. தேசிய விகிதம்: 2022ஆம் ஆண்டு போலீஸ் தரவுகளின்படி, இலங்கையின் ஒட்டுமொத்த தற்கொலை விகிதம் ஒரு லட்சத்திற்கு சுமார் 15 ஆக உள்ளது. இது தெற்காசியாவின் மிக உயர்ந்த விகிதங்களில் ஒன்றாகும். நாளொன்றுக்கு சராசரியாக 8-10 மரணங்கள் தற்கொலையால் நிகழ்கின்றன.

இளம் பெண்கள் அபாயம் (17-25 வயது): 17 முதல் 25 வயதுக்குட்பட்ட இளம்பெண்களிடையே தற்கொலை விகிதம் ஒப்பீட்டளவில் மற்ற வயதுப் பிரிவுகளை விட அதிகமாக உள்ளது. திருமண வன்முறை, வரதட்சணை தொடர்பான அழுத்தங்கள், பாலியல் துன்புறுத்தல் மற்றும் குடும்பப் பொருளாதாரச் சுமை ஆகியவை இவர்களிடையே பிரதான காரணிகளாக உள்ளன. இளைஞர்களின் முக்கிய காரணங்கள்: 18-35 வயதுடைய இளைஞர்களிடையே வேலையின்மை, கடன்பிரச்சினைகள் (குறிப்பாக நுண்நிதிக் கடன்), உயர்கல்வியில் தோல்வி மற்றும் போதைப்பொருள் பாவனை ஆகியவை முக்கிய அபாயக் காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.



மாணவர்களின் மனநல ஆய்வு (2024 GSHS): 13-17 வயதுடைய பள்ளி மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, சுமார் 18% மாணவர்கள் ஆழ்ந்த மனச்சோர்வு அறிகுறிகளைக் கொண்டிருப்பதையும், அச்சமூட்டும் விதமாக 15% மாணவர்கள் தற்கொலை பற்றி தீவிரமாகச் சிந்தித்திருப்பதையும் காட்டுகிறது.

இந்த புள்ளிவிவரங்கள், தற்கொலை என்பது தனிப்பட்ட மனநலப் பிரச்சினைகளிலிருந்து மட்டுமல்லாமல், இலங்கையின் ஆழமான சமூக-பொருளாதார அழுத்தங்கள், குறிப்பாகப் பொருளாதார நெருக்கடி காலத்தில் உருவானது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

II. தற்கொலைக்குப் பிந்தைய குடும்பத்தின் துயரம்,ஆழமான வடுக்கள்

ஒரு குடும்பத்தில் நிகழும் தற்கொலை, இழப்பை விடவும் மிக ஆழமான, சிக்கலான துயரத்தை விதைக்கிறது. இது ‘சிக்கலான துக்கம்’ (Complicated Grief) என மனநல அறிவியலில் அழைக்கப்படுகிறது.

1. சிக்கலான உளவியல் தாக்கம்:

குற்ற உணர்வு மற்றும் பழிசுமத்துதல்: குடும்ப உறுப்பினர்கள், குறிப்பாகப் பெற்றோர் மற்றும் உடன்பிறப்புகள், “நான் ஏன் கவனிக்கவில்லை?”, “இதை நான் தடுத்திருக்கலாமே” என்ற தீவிர குற்ற உணர்வில் தவிக்கின்றனர். இந்த உணர்வு மற்ற வகை மரணங்களில் ஏற்படும் துயரத்தை விட மிகக் கடுமையானது. தற்கொலை செய்துகொண்டவரின் மரணத்திற்கு மற்றவர்களை அல்லது தற்கொலை செய்துகொண்டவரையே பழிசுமத்தும் போக்கு குடும்ப உறவுகளை மேலும் சிதைக்கிறது.

உளவியல் நோய்களின் அதிகரிப்பு: தற்கொலைக்குப் பிந்தைய துயரத்தை எதிர்கொண்ட குடும்ப உறுப்பினர்கள் மனச்சோர்வு, பதட்டம், தூக்கமின்மை மற்றும் அதிர்ச்சிக்குப் பிந்தைய மன அழுத்தக் கோளாறு (PTSD) ஆகியவற்றால் பாதிக்கப்படுவதற்கான அபாயம் மற்றவர்களை விட 50% அதிகமாக உள்ளது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இரண்டாம் நிலை தற்கொலை அபாயம்: குடும்பத்தில் ஒரு தற்கொலை நடந்தால், எஞ்சியிருக்கும் உறுப்பினர்கள், குறிப்பாகச் சகோதர/சகோதரிகள், தற்கொலை எண்ணங்கள் மற்றும் முயற்சி செய்வதற்கான அபாயம் இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரிக்கிறது. இது உடனடி மற்றும் தீவிர மனநல ஆதரவின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

உறவுகளில் விரிசல்: துக்கத்தை கையாளும் விதம் ஒவ்வொருவருக்கும் வேறுபடுவதால், குடும்ப உறுப்பினர்களிடையே உணர்ச்சி ரீதியான இடைவெளிகள் ஏற்படுகின்றன. ஒருவர் அமைதியாகத் துக்கப்பட, மற்றவர் கோபத்தை வெளிப்படுத்துகிறார்.



இந்த வேறுபாடுகள் குடும்பப் பிணைப்புகளைத் தளர்த்தி, உறவுகளை முடக்கச் செய்கின்றன.

2. பொருளாதாரச் சுமை: வருமானம் மற்றும் எதிர்கால இழப்பு: இழக்கப்பட்ட நபர் குடும்பத்தின் வருமானம் ஈட்டுபவராகவோ அல்லது விரைவில் ஈட்டக்கூடியவராகவோ இருந்தால், குடும்பம் திடீர் நிதி நெருக்கடியை எதிர்கொள்கிறது. குறிப்பாகக் கடனில் தற்கொலைகள் நிகழும்போது, அக் கடன் குடும்பத்தின் மீது சுமத்தப்பட்டு, எஞ்சியவர்களை மேலும் நிதிச் சுமைக்குள் தள்ளுகிறது. சிகிச்சைச் செலவு: துயரத்தால் பாதிக்கப்பட்ட பிற குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் உளவியல் ஆலோசனை, மனநல மருந்துகள் மற்றும் சிகிச்சைக்கான செலவுகள் குடும்பத்தின் நிதி ஆதாரங்களை மேலும் வற்றச் செய்கின்றன.

III. நண்பர்கள் மற்றும் சமூக உறவுகளின் துயரம்: கண்ணுக்குத் தெரியாத சோகம் தற்கொலை என்பது குடும்பத்தை மட்டுமல்ல, நெருங்கிய நண்பர்கள் வட்டத்தையும், சமூகத்தின் பிற உறவுகளையும் ஆழமாகப் பாதிக்கிறது.

1. நண்பர்களின் அதிர்ச்சி மற்றும் விரக்தி:

உளவியல் அதிர்ச்சி: இலங்கையில், இளைஞர்கள் தமது நண்பர்கள் மத்தியில் தங்கள் பிரச்சனைகளைப் பகிர்ந்துகொள்வது அதிகம். ஒரு நண்பரின் தற்கொலை, மற்ற நண்பர்களை அதிர்ச்சியிலும் விரக்தியிலும் ஆழ்த்துகிறது. அவர்கள் பெரும்பாலும் குற்ற உணர்வை (நானும் ஒரு காரணமாக இருக்கலாம் அல்லது நான் ஏன் உதவவில்லை?) அனுபவிக்கின்றனர். நம்பிக்கையின்மை: இளம் வயதில் இத்தகைய இழப்பைச் சந்திப்பது, வாழ்க்கையின் மீதான அவர்களின் நம்பிக்கையைப் பாதிக்கலாம்.

“எதிர்காலம் நிச்சயமற்றது” அல்லது “இன்னொரு நண்பரும் இதைச் செய்யக்கூடும்” என்ற அச்சம் அவர்களின் மனதைப் பீடிக்கிறது. சமூகத் தனிமைப்படுத்தல்: தற்கொலை செய்துகொண்டவரின்

நண்பர்கள், மற்றவர்களால் கேள்விகள் கேட்கப்பட்டு அல்லது விலக்கி வைக்கப்படலாம். இது அவர்களின் சொந்த துயரத்தை மறைக்கவோ அல்லது தனிமையில் துக்கப்படவோ வழிவகுக்கிறது. நண்பர்களுக்கான ஆதரவுக் கட்டமைப்புகள் (Peer Support) இல்லாதது இலங்கையின் கிராமப்புறங்களில் ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.

2. சமூக உறவுகளின் பாதிப்பு மற்றும் களங்கம்:

சமூக களங்கம் (Stigma): இலங்கையின் சமூக-பண்பாட்டு சூழலில் தற்கொலை மரணம் ஒரு தீராத களங்கமாகப் பார்க்கப்படுகிறது. இது குடும்பம் மற்றும் உறவினர்களுக்குச் சமூகத்தின் முன் கூச்சத்தையும் வெட்கத்தையும் ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக, அக்குடும்பம் சடங்குகள், பண்டிகைகள் மற்றும் சமூக நிகழ்வுகளிலிருந்து விலக்கி வைக்கப்படலாம்.

பழிவாங்கும் மற்றும் வதந்திகளின் சுழற்சி: தற்கொலைக்கான காரணம் குறித்து உறவினர்கள் மற்றும் சமூகத்தில் வதந்திகள் பரவுவது இயல்பானது. "அவர்கள் குடும்பத்தில்தான் கோளாறு", "காதல் தோல்விக்குக் காரணம் யார்?" போன்ற பேச்சுக்கள் எஞ்சியிருக்கும் குடும்ப உறுப்பினர்களின் துயரத்தை மேலும் தீவிரமாக்குகின்றன.

உறவினர்களுக்கிடையேயான உறவுகள்: தற்கொலைக்குப் பிந்தைய விசாரணைகள் மற்றும் பழிசுமத்தும் போக்குகள், நெருங்கிய உறவினர்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்துகின்றன. நீண்டகால உறவுகளும், பரம்பரை பிணைப்புகளும் சிதைவடைகின்றன.

## IV. தீர்வு நோக்கிய நகர்வு: தடுப்பரண்களை நிறுவுதல்

இலங்கையில் இளையோர் தற்கொலையின் சங்கிலித் தொடரை உடைப்பதற்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நண்பர்களின் துயரத்தைக் கையாள்வதற்கும் ஒரு விரிவான தேசிய மனநல உத்தி தேவைப்படுகிறது.



அ) மனநலச் சேவைகளை அணுகக்கூடியதாக்குதல்:

பாடசாலை ஆலோசனை: பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் தகுதியான உளவியல் ஆலோசகர்கள் (Counsellors) கட்டாயமாக்கப்பட வேண்டும். 2024 GSHS ஆய்வு முடிவுகள் மனநலச் சேவைகளின் தேவை பள்ளி மட்டத்தில் அதிகமாக இருப்பதைக் காட்டுகிறது.

தற்கொலை தடுப்பு உதவி எண்கள்: 24/7 செயல்படக்கூடிய, இலவச மற்றும் நம்பிக்கைக்குரிய தற்கொலைத் தடுப்பு உதவி எண்களை (Helplines) நாடு முழுவதும் உள்ளூர் மொழிகளில் வலுப்படுத்த வேண்டும்.

ஆ) களங்கத்தை நீக்குதல் மற்றும் விழிப்புணர்வு:

ஊடகத்தின் பொறுப்பு: ஊடகங்கள் தற்கொலை தொடர்பான செய்திகளைப் பொறுப்புடன் கையாள வேண்டும். தற்கொலை முறைகளை விவரிப்பதைத் தவிர்க்கவும், மாறாக, உதவி பெறக்கூடிய ஆதாரங்களை (Helplines) முன்னிலைப்படுத்தவும் உலக சுகாதார அமைப்பின் (WHO) வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.

சமூக மனநலக் கல்வி: கிராம மட்டங்களில் மனநலச் சேவைப் பணியாளர்கள் மூலம் (Field Workers) மனநலப் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிகிச்சை பெறுவது இயல்பானது என்ற புரிதலை உருவாக்க வேண்டும்.

இ) தற்கொலைக்குப் பிந்தைய ஆதரவு (Postvention):

துயரக் குழுக்கள்: தற்கொலை இழப்பைச் சந்தித்த குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுக்காக பிரத்தியேகமான ஆதரவுக் குழுக்களை (Support Groups for Suicide Survivors) நிறுவ வேண்டும். இக்குழுக்கள் துயரத்தில் இருக்கும் நபர்கள் தங்கள் உணர்வுகளைப் பாதுகாப்பான இடத்தில் பகிர்ந்து கொள்ள உதவுகின்றன. பள்ளி அளவிலான தலையீடு: ஒரு மாணவர் தற்கொலை செய்துகொண்டால், அப் பள்ளியில் எஞ்சிய மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்கும் உடனடியாக உளவியல் ஆதரவு மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

ஈ) சமூக-பொருளாதார ஸ்திரத்தன்மை:

இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கையின்மையைக் குறைப்பதற்கும், தற்கொலை அபாயத்தைக் குறைப்பதற்கும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். கடனினால் ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைக்க நுண்நிதிக் கடன் தொடர்பான கொள்கைகளைச் சீர்திருத்த வேண்டும்.

உயிரை நேசிக்கும் சமூகம்:-

இலங்கையில் இளம் வயதினரின் தற்கொலைகள் ஒரு தனிப்பட்ட இழப்பு மட்டுமல்ல் அது ஒட்டுமொத்த சமூகத்தின் இதயத்தில் உருவாகும் ஒரு ஆழமான காயம். 2025ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்கள் எச்சரிக்கை மணியை ஒலிக்கச் செய்கின்றன. குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் சமூக உறவுகள் அனுபவிக்கும் இந்த நீடித்த துயரத்தைப் போக்குவதற்கு, நாம் வெறும் வருத்தத்தை மட்டும் தெரிவிக்காமல், செயலில் இறங்க வேண்டும். நமது இளைஞர்களின் ஒவ்வொரு உயிருக்கும் மதிப்பு உண்டு. தற்கொலைகளைத் தவிர்ப்பது மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பது ஆகிய இரண்டையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கடமையாகக் கருதி, உயிரை நேசிக்கும் ஒரு சமூகமாக இலங்கை தன்னை மாற்றியமைக்க வேண்டும்.



# யாழ். மாவட்டத்தில் போதைப் பொருளின் தாக்கம் சிறுவர்களையும் பாதித்துள்ளது

**யாழ். மாவட்டத்தில் போதைப் பொருளின் தாக்கம் அதிகமாகப் பரவியுள்ளது. இது சிறுவர்களையும் பாதித்துள்ளது என மருத்துவர் வினோதா அச்சுதன் தெரிவித்துள்ளார்.**



போதைப் பொருள் பாவனையில் ஈடுபடும் பிள்ளைகள் சமூகத்திற்கு வேண்டப்படாத பிள்ளைகள் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். ஆரம்பத்திலேயே போதைப் பொருளுக்கு அடிமையான பிள் ளைகளை அழைத்து வந்து உரிய முறையில் சிகிச்சை யை பெற்றுக் கொடுத்தால் அவர்களை ஆரம்பத்தில் இருந்த பிள்ளைகளாக மாற்ற முடியும்

பல வருடங்களாக சாவகச்சேரியில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறேன். என்னிடம் சிகிச்சை பெற்ற பலர் போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து முற்றாக விடு பட்டு இருக்கிறார்கள்.

சிகிச்சை பலனளிக்காது அல்லது போதைப்பொருள் பாவிப்பவர்களை உதவாத பிள்ளைகள் என்று தவறாக நினைக்காமல் அவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை பெற்றுக் கொடுத்தால் அவர் களை மாற்ற முடியும். தற்போதைய காலத்தில் பாடசாலை மாணவர்களும் இந்த போதைப் பொருளால் பாதிப்படைந்துள்ளார்கள்.

ஒவ்வொரு மாணவர்க ளையும் வகுப்பறையில் நன்றாக கவனித்து வரும் ஆசிரியரால் ஒரு மாணவன் போதைப் பொருளால் கடுமையாக பாதிப்படைந்திருந்தால் அந்த மாணவனுடைய செயற்பாட்டை வைத்து மிக இலகுவாக கண்டுபிடிக்கலாம் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும் பிள்ளைகள் திடீரென்று பெரியவர்களுடன் சேருகின்றார்கள் என்று சொன்னால் அது தொடர்பில் ஆராய வேண்டும் அவ்வாறு பெரியவர்களுடன் சேரும் அதிகளவான சிறியவர் போதைக்கு மிக விரைவாக அடிமையாகுவதை அவதானிக்க முடிகிறது.



போதைக்கு அடிமையானவர்களை குணப்படுத்தும் சிகிச்சை சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணத்தில் அளிக்கப்படுகிறது. ஆகவே போதைப் பொருளால் கடுமையாக பாதிப்படைந்த உங்களுடைய பிள்ளைகள், உறவினர்களை வேண்டாதவர்களாக நினைக்காமல் அவர் களை அழைத்து வந்து உரிய முறையில் சிகிச்சை அளித்து போதைப் பொருள் தாக்கத்திலிருந்து அவர்களை விடுபட செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

## சிகரெட் பயன்பாட்டால் வருடாந்தம் 22,000 உயிரிழப்புகள்

**போதைப் பொருள் தகவல் மையம் தெரிவிப்பு**

புகையிலை மற்றும் சிகரெட் பாவனை காரணமாக இலங்கையில் வருடாந்தம் சுமார் 22 ஆயிரம் உயிரிழப்புகள் பதிவாகுவதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்படும் அனைத்து இறப்புகளில் 83 சதவீதமானவை தொற்று அல்லாத நோய்களால் ஏற்படுகின்றது.

இந்த இறப்புகளில் செல்வாக்கு செலுத்தும் நான்கு பிரதான காரணிகளில் புகையிலை பயன்பாடும் ஒன்றாகும்.

இலங்கையில் சுமார் 1.5 மில்லியன் பெரியவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர்.

அதேநேரம், உலகளவில் ஒவ்வொரு ஆறு வினாடிக்கும் புகையிலை பயன்பாடு காரணமாக ஒரு இறப்பு பதி வாகுவதாக புகையிலை மற்றும் மது பானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க குறிப்பிட்டார்.




அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காணப்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு

# பசிப்பிணி போக்கிய மணிமேகலை



மணிமேகலை காப்பியத்தில் வரும் மிகச் சுவாரசியமான மற்றும் திருப்புமுனை வாய்ந்த பகுதி”ஆதிரை பிச்சையிட்ட காதை” மற்றும் மணிமேகலை ”அமுதசுரபி” பெற்ற வரலாறாகும். சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகக் கருதப்படும் மணிமேகலை, ஒரு பெண்ணின் ஆன்மீகத் தேடலையும், பசிப்பிணி போக்கும் அறத்தையும் மையமாகக் கொண்டது.

கோவலன் மற்றும் மாதவியின் மகளான மணிமேகலை, உலகியல் இன்பங்களை வெறுத்துத் துறவு பூண எண்ணுகிறாள். மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவத் தீவிற்கு அழைத்துச் சென்று, அவளுடைய முற்பிறவி வரலாற்றை உணரச் செய்கிறது. அங்குள்ள “கோமுகி“ என்னும் பொய்கையில், வைகாசி முழுநிலவு நாளில் தோன்றிய “அமுதசுரபி“ என்னும் அரிய பாத்திரம் மணிமேகலையின் கையில் வந்து சேர்கிறது. இந்தப் பாத்திரத்தின் சிறப்பு என்னவென்றால், இதில் இடப்படும் ஒரு பிடி உணவு, எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும்.

அமுதசுரபியைப் பெற்ற மணிமேகலை, அறவண அடிகளின் அறிவுரைப்படி, முதன்முதலில் ஒரு கற்புக்கரசியிடம் பிச்சை பெற விரும்புகிறாள். அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவள்தான் ஆதிரை. ஆதிரையின் வாழ்க்கை வரலாறு மிகவும் உருக்கமானது மற்றும் சுவாரசியமானது. அவளது கணவன் சாதுவன், பரத்தையர் உறவால் தன் செல்வத்தையெல்லாம் இழந்து, கடல்கடந்து வாணிகம் செய்யச் சென்றபோது கப்பல் கவிழ்ந்து இறந்துவிட்டதாகச் செய்தி வருகிறது. ஆனால், தீய பழக்கங்கள் இல்லாத ஆதிரை, தன் கணவன் உயிருடன் திரும்புவான் என்ற நம்பிக்கையில் காத்திருந்தாள். இவளுடைய தூய்மையான அன்பும் கற்பும் அவளை ஒரு சிறந்த அறவோராக மாற்றியிருந்தது.

மணிமேகலை ஆதிரையின் இல்லத்திற்குச் சென்று, அமுதசுரபியை ஏந்தி நிற்கிறாள். ஆதிரை அந்தப் பாத்திரத்தின் மகிமையை உணர்ந்து, ”உலகிலுள்ள உயிர்களின் பசிப்பிணி எல்லாம் நீங்குக!” என்று கூறி முதன்முதலில் உணவிடுகிறாள். அங்கிருந்துதான் மணிமேகலையின் மாபெரும் அறப்பணி தொடங்குகிறது.

அமுதசுரபியில் உணவு பெருகத் தொடங்கியதும், மணிமேகலை புகார் நகரிலுள்ள ஏழைகள், குருடர், செவிடர், ஆதரவற்றோர் என அனைவருக்கும் உணவு வழங்குகிறாள். இதைக் கேள்விப்பட்ட சோழ மன்னன் கிள்ளிவளவன், அவளது அறச்செயலைக் கண்டு வியந்து, அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வருகிறான்.

மணிமேகலை மன்னனிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறாள். அந்த வேண்டுகோள் மிக முக்கியமானது: “மன்னா, சிறைச்சாலையில் இருப்பவர்கள் பசியால் வாடுகிறார்கள். அந்தச் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்ற வேண்டும்” என்கிறாள். மன்னனும் அதற்குச் சம்மதிக்கிறான்.

இந்தக் கதையின் மற்றொரு சுவாரசியமான பகுதி மணிமேகலைக்கும் உதயகுமாரனுக்கும் இடையிலான உறவு. சோழ இளவரசன் உதயகுமாரன் மணிமேகலையின் அழகில் மயங்கி அவளைத் தொடர்கிறான். ஆனால், துறவு வாழ்க்கை மேற்கொண்ட மணிமேகலை அவனிடமிருந்து தப்பிக்க விஞ்சையர் (வித்யாதரர்) உருவம் கொள்கிறாள். காயசண்டிகை எனும் விஞ்சையர் பெண்ணின் உருவத்தில் அவள் இருக்கும்போது, அவளது கணவன் காஞ்சனன் என்பவன், உதயகுமாரன் தன் மனைவியைத் தான் பின்தொடர்கிறான் எனத் தவறாக எண்ணி அவனைக் கொன்றுவிடுகிறான். இது காப்பியத்தில் ஒரு பெரும் சோகத்தையும், வினைப்பயன் (கர்மா) எத்தகையது என்பதையும் உணர்த்துகிறது.

சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றிய மணிமேகலை, பின்னர் வஞ்சி மாநகரம் சென்று பல்வேறு சமயங்களின் தத்துவங்களைக் கற்கிறாள். இறுதியில் காஞ்சி மாநகரம் அடைந்து, அங்கு ஏற்பட்டிருந்த பெரும் பஞ்சத்தைப் போக்க அமுதசுரபி மூலம் மக்களுக்கு உணவளிக்கிறாள். அறவண அடிகளிடம் அறவுரைகளைக் கேட்டு, பிறவிப் பெருங்கடலை நீந்தி வீடுபேறு அடைவதற்கான வழியில் நடக்கிறாள்.

மணிமேகலை காப்பியம் வெறும் மதக் கோட்பாடுகளை மட்டும் பேசவில்லை. ”பசிப்பிணி என்னும் பாவி”யைத் துரத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. ஆதிரையிடம் பிச்சை பெற்றுத் தொடங்கிய அந்தப் பயணம், ஒரு தனிமனிதப் பெண்ணின் வாழ்க்கையை உலகளாவிய கருணைமிக்க வரலாறாக மாற்றியது. அமுதசுரபி என்பது வெறும் பாத்திரம் மட்டுமல்ல, அது வற்றாத அன்பின் அடையாளமாகும். பசித்தவர்களுக்கு உணவிடுவதுதான் ஒரு மனிதன் செய்யக்கூடிய மிக உயரிய அறம் என்பதை மணிமேகலையின் ஒவ்வொரு செயலும் நமக்கு உணர்த்துகிறது.

இக்கதை, ஒரு பெண் நினைத்தால் சமூகத்தில் எத்தகைய மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பதற்கும், தீய வழியில் செல்பவர்கள் கூட ஒரு காலக்கட்டத்தில் திருந்தி நல்வழிப்பட முடியும் என்பதற்கும் சான்றாகத் திகழ்கிறது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்“ என்று சொன்னதை, சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் “பசிப்பிணி மருத்துவர்” மூலமாக உயிர்களின் துன்பத்தைப் போக்கும் வழியாகக் காட்டுகிறார்.



# எமது நாட்டுப்புறப் பாடலுக்காக தேசிய விருது வென்றார் இசைக் கலைஞர் பத்மயன்




இலங்கை இசைத்துறையின் மிக உயரிய கௌரவமான அரச இசை விருதுகள் வழங்கும் விழாவில், கலைஞர் சிவானந்தம் பத்மயன் அவர்கள் முக்கிய விருதுகளை வென்று ஈழத்து கலைப்பரப்பில் ஒரு புதிய சரித்திரத்தைப் படைத்துள்ளார். எமது மண்ணின் ஆழமான உணர்வுகளையும் கிராமியத் தொனியையும் சுமந்து வந்த "கண்ணம்மா" எனும் நாட்டுப்புறப் பாடலுக்காக இந்த உயரிய அங்கீகாரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறந்த மெல்லிசை மற்றும் இசையமைப்பு, சிறந்த நாட்டுப்புற இசையமைப்பு ஆகிய பிரிவுகளில் அவர் இந்த விருதுகளைத் தட்டிச் சென்றுள்ளார். ஒரு படைப்புக்கு ஒரே நேரத்தில் இத்தகைய கௌரவங்கள் கிடைப்பது என்பது அபூர்வமான ஒன்று. இந்தப் பாடலில் அவர் கையாண்டுள்ள இசை நுணுக்கங்கள், நாட்டுப்புற இசையின் ஆன்மா சிதையாமல் அதனை நவீன காலத்திற்கு ஏற்ப செதுக்கிய விதம் மெச்சத்தக்கது.

இந்த அங்கீகாரத்திற்குப் பின்னால் பத்மயன் அவர்களின் பல ஆண்டுகால அயராத உழைப்பும், இசையின் மீதான தீராத காதலும் மறைந்திருக்கிறது. மெல்லிசையின் இனிமையையும், நாட்டுப்புற இசையின் இயல்பையும் ஒருசேரக் கோர்த்து அவர் உருவாக்கிய "கண்ணம்மா", இன்று தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டு ஒட்டுமொத்த கலை உலகிற்கும் பெருமை சேர்த்துள்ளது.

மண்ணின் கலையை நேசிக்கும் ஒரு கலைஞனுக்குக் கிடைத்திருக்கும் இந்த மகுடம், அவரது நீண்ட கலைப்பயணத்திற்கான ஒரு உன்னதமான சாட்சியமாகும். இந்த வெற்றி இன்னும் பல படைப்புகளை உருவாக்க அவருக்கு உந்துதலாக அமையட்டும். இலங்கையின் இசைப் பாரம்பரியத்தை உலகளாவிய ரீதியில் கொண்டு செல்லும் உன்னத பணியில் மேலும் பல சாதனைகளைப் புரிய சிவானந்தம் பத்மயன் அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# அன்பென்றால் அன்புதான்


அன்பு, பாசம்
நேசம், பிரியம் - என
ஒரே பொருண்மையைத் தரும்
இப்படியான சொற்கள்
இன்று அன்றாட நடப்பில்
மட்டுமன்றி

அகராதியில் இருந்து கூட
அழிக்கப்பட்டு விட்டனவோ?
இயந்திர மயமான உலகில்
இதயங்கள் எல்லாம்
இடைநிறுத்தப்பட்டனவோ?
இதய பூர்வமான இருத்தல்களும்
இயங்கல்களும்
இறந்து போயினவா?
காணாமற் போயினவா?
காணாமல் ஆக்கப்பட்டனவா?

அன்பு
அரசோச்சிய இடமெல்லாம்
பணமும் புகழும்
அதிகார வெறியும்
அந்தஸ்து விருப்பும்
ஆக்கிரமித்துக் கொண்டதால்
தன்னலமற்ற அன்பு
தானே மடிந்ததா?
மனிதனை மனிதனே
சமைத்துண்ண முயலும்
சாக்கடை உலகில்
சகிர்தய நிலை
சாத்தியமில்லை என்று
சத்தமற்றுச் சென்றதா?
அன்பு அழிந்ததா?
அழிக்கப்பட்டதா?
விடையற்ற வினாக்களே
விரவியிருப்பினும்

காலநீட்சியில்
அறிவியல் வளர்ச்சியில்
அகழாய்வு மூலம் - இந்த
அவனியில் ஒருகாலத்தில்
அன்பின் ஆட்சியே
ஆதிக்கம் செய்தமை

கண்டுபிடிக்கப்படுமானால்
முதுமானிப்பட்டங்களிற்கும்
ஆய்வுக்கட்டுரைகளுக்கும்
அவை நிச்சயம் உதவிடும்
ஏனெனில்
அன்பென்றால் அன்புதான்
அதன் குணம் என்றும்
அழிவதே இல்லை...



பிரசாந்தி ஜீவகன்



# தனிமை
# நவீன சமூகத்தின் மறைமுக நோய்

சிவகுமார் ஜதுஷிகா
2ம் வருட உளவியற்துறை மாணவி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இன்றைய உலகம் தொழில்நுட்ப வளர்ச்சி, வேகமான வாழ்க்கை முறை, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றால் முன்னேறிய காலகட்டமாகக் கருதப்படுகிறது. மனிதன் இன்று உலகின் எந்த மூலையிலிருந்தாலும், ஒரு சிறிய கைபேசியின் மூலம் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் அளவிற்கு வசதிகளை பெற்றுள்ளான். சமூக ஊடகங்கள், இணையம், தகவல் தொழில்நுட்பம் ஆகியவை மனிதர்களை நெருக்கமாக இணைத்துள்ளன என்று வெளிப்படையாகத் தோன்றினாலும், உண்மையில் மனிதர்கள் மனதளவில் அதிகமாக தனிமையை அனுபவிக்கும் காலமாக இது மாறியுள்ளது. இதனால்தான் தனிமை இன்று நவீன சமூகத்தின் ஒரு மறைமுக நோயாக கருதப்படுகிறது.

தனிமை என்பது ஒருவரும் அருகில் இல்லாமல் தனியாக வாழ்வது மட்டும் அல்ல. பலருடன் இருந்தாலும், மனதைப் பகிர யாரும் இல்லை என்ற வெறுமை உணர்வே உண்மையான தனிமை. குடும்பத்துடன் வாழ்ந்தாலும், வேலை இடத்தில் சக ஊழியர்களுடன் இருந்தாலும், நண்பர்கள் சுற்றி இருந்தாலும் கூட ஒருவர் தனிமையை உணரலாம். இது வெளியில் தெரியாத, உள்ளுக்குள் மெதுவாக வளரக்கூடிய உளவியல் நிலையாகும். அதனால் தான் இதை “மறைமுக நோய்” என்று அழைக்கப்படுகிறது.

நவீன சமூகத்தில் தனிமை அதிகரிக்க பல காரணங்கள் உள்ளன. முதன்மையாக நகரமயமாதல் குறிப்பிடத்தக்கது. வேலை, கல்வி, வசதி ஆகிய காரணங்களுக்காக மக்கள் கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு இடம்பெயர்கிறார்கள். இதனால் முன்பு இருந்த கூட்டு வாழ்வு, அயலவர் உறவுகள், சமூக ஆதரவு போன்றவை மெதுவாகக் குறைந்து வருகின்றன. தனிக்குடும்ப வாழ்க்கை முறை அதிகரித்ததால், தாத்தா–பாட்டி, உறவினர்கள், அயலவர்கள் ஆகியோருடன் இருந்த நெருக்கம் இன்றைய தலைமுறைக்கு குறைவாக உள்ளது.

வேலை அழுத்தமும் தனிமையை அதிகரிக்கும் முக்கிய காரணமாகும். இன்றைய போட்டி நிறைந்த உலகில், மனிதர்கள் தங்கள் வேலை, சம்பளம், பதவி, எதிர்கால பாதுகாப்பு போன்றவற்றில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். நீண்ட வேலை நேரம், ஓய்வில்லாத வாழ்க்கை முறை, மன அழுத்தம் ஆகியவை குடும்பம் மற்றும் நண்பர்களுடன் செலவிட வேண்டிய நேரத்தை குறைக்கின்றன. “நேரம் இல்லை” என்ற சொல்லே மனித உறவுகளுக்கான மிகப் பெரிய தடையாக மாறியுள்ளது.

சமூக ஊடகங்களும் தனிமைக்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றன. பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப் போன்ற தளங்களில் மனிதர்கள் தொடர்ந்து இணைந்திருக்கிறார்கள். ஆனால் இந்த இணைப்பு பெரும்பாலும் மேலோட்டமானதாகவே இருக்கிறது. பிறர் காட்டும் மகிழ்ச்சி, வெற்றி, அழகு போன்றவற்றை பார்த்து, தங்களது வாழ்க்கையை ஒப்பிடும் பழக்கம் உருவாகிறது. இதனால்



குறை உணர்வு, பொறாமை, தன்னம்பிக்கை இழப்பு போன்றவை ஏற்பட்டு, மனதளவில் தனிமை அதிகரிக்கிறது. உண்மையான உரையாடல்களுக்கு பதிலாக குறுந்தகவல்கள் மற்றும் “லைக்” கள் மட்டுமே மனித உறவுகளின் அளவுகோலாக மாறிவிட்டன.

தனிமை மனித உளவியலில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நீண்ட கால தனிமை மனஅழுத்தம், கவலை, மனச்சோர்வு போன்ற



மனநலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். ஒருவர் தன்னைப் பற்றி எதிர்மறையாக சிந்திக்க ஆரம்பிக்கலாம். “யாருக்கும் நான் தேவையில்லை”, “என்னை புரிந்து கொள்ள யாரும் இல்லை” போன்ற எண்ணங்கள் தோன்றும். இதனால் தன்னம்பிக்கை குறைந்து, சமூகத்திலிருந்து மேலும் விலகும் நிலை உருவாகிறது.

தனிமை உடல் நலத்தையும் பாதிக்கக்கூடியது. தொடர்ச்சியான மனஅழுத்தம் தூக்கமின்மை, தலைவலி, சோர்வு, உணவு பழக்கங்களில் மாற்றம் போன்ற பிரச்சினைகளை உருவாக்குகிறது. சில ஆய்வுகள் நீண்ட கால தனிமை இதய நோய்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் போன்ற உடல் நலச் சிக்கல்களுக்கும் காரணமாக இருக்கலாம் என்று குறிப்பிடுகின்றன. அதனால் தனிமை மனநலப் பிரச்சினை மட்டுமல்ல முழுமையான மனித நலத்தையும் பாதிக்கும் ஒரு நிலையாகும்.

தனிமை தனிநபரின் பிரச்சினையாக மட்டும் இல்லாமல் சமூகத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மனிதர்களுக்கிடையேயான நம்பிக்கை குறையும்போது சமூக ஒற்றுமை பாதிக்கப்படுகிறது. பரஸ்பர உதவி, அக்கறை, பொறுப்பு உணர்வு போன்ற சமூக மதிப்புகள் மெதுவாக மங்குகின்றன. இதன் விளைவாக சமூகம் உணர்வற்ற, இயந்திரமயமான அமைப்பாக மாறும் அபாயம் உள்ளது. இது நீண்ட காலத்தில் சமூக அமைதிக்கும் வளர்ச்சிக்கும் பாதகமாக அமையும்.

இந்த மறைமுக நோயை எதிர்கொள்ள தனிநபர் மட்டுமல்ல் குடும்பம், கல்வி நிறுவனங்கள், வேலை இடங்கள் மற்றும் சமூக அமைப்புகள் அனைத்தும் பொறுப்புடன் செயல்பட வேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் நேரம் ஒதுக்கி பேசுதல், உணர்வுகளைப் பகிர்தல், குழந்தைகள் மற்றும் முதியவர்களின் மனநிலையை கவனித்தல் மிக முக்கியம். குழந்தைப் பருவத்திலிருந்தே உறவுகளின் மதிப்பை கற்றுக் கொடுப்பது எதிர்கால சமூக நலத்திற்கு அடித்தளமாக இருக்கும்.



நண்பர்களுடன் நேரடி சந்திப்புகள், உண்மையான உரையாடல்கள், சமூக மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்பு தனிமையை குறைக்க உதவும். அதேபோல், மனநலப் பிரச்சினைகள் குறித்து வெளிப்படையாக பேசும் சமூக சூழல் உருவாக்கப்பட வேண்டும். மனநல ஆலோசனையை நாடுவது பலவீனம் அல்ல் அது தன்னலம் காக்கும் அறிவுடைமை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

மனிதன் இயல்பாகவே ஒரு சமூக உயிர். அன்பு, புரிதல், தொடர்பு, உறவு ஆகியவை மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள். இன்றைய நவீன உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் சேர்ந்து மனித உறவுகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. தனிமையை புறக்கணிக்காமல், அதை உணர்ந்து, மனித இணைப்புகளை மீண்டும் உயிர்ப்பிப்பதே ஆரோக்கியமான மனநலத்திற்கும் வலுவான சமூகத்திற்கும் அடித்தளமாகும். தனிமையை தகர்த்து, மனிதநேயத்தை மீட்டெடுப்பதே இன்றைய சமூகத்தின் மிக முக்கியமான தேவையாகும்.



# சிவபூமி பாடசாலை தென்மராட்சியில் திறந்து வைப்பு



தென்மராட்சி சிவபூமி பாடசாலை வேலயுதம் வீதி சாவகச்சேரியில் புதன் கிழமை (28) திறந்துவைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளை தலைவர் காலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மங்கல விளக்கேற்றலுடன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் சிவபூமி பாடசாலையை நாடாவெட்டி திறந்துவைத்ததுடன் படிம கல்லையூம் திறந்து வைத்தார்.

இதேவேளை சிவபூமி அறக்கட்டளையானது கடந்த 25 ஆண்டுகளாக அறப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பிறப்பிலேயே மனவளர்ச்சி குறைந்த விசேட தேவையுடைய மாணவர்களுக்காக 2003 கோண்டாவிலிலும், 2016இல் கிளிநொச்சியிலும் எமது அறக்கட்டளையால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன.





இந்நிலையில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனில் வசிப்பவர்களுமாகிய வைத்திய கலாநிதி கனகசபை கதிர்காமநாதன் இரட்ணேஸ்வரி தம்பதிகள் மனமுவந்து வழங்கிய இல்லத்தைப் புனரமைத்து இப்பாடசாலை ஆரம்பிக்கப்படுகிறது. பெரிய பரப்பளவு கொண்ட தென்மராட்சித் திருநகரில் மாற்றுவலுவுடைய குழந்தைகளை மகிழ்வாய் வாழ வைக்க இந்த பீடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சாவகச்சேரி பிரதேச செயலர் எப்.சி.சத்தியசோதி கௌரவ விருந்தினர் கேன் புற்றுநோய் காப்பக தலைவர் வைத்திய கலாநிதி கமலா வைத்தியநாதன் ,சாவகச்சேரி நகர சபை தவிசாளர் சிறிபிரகாஸ் ஆகியோர் கலந்து கொண்டார்கள் அதிதிகள் உரையை தொடர்ந்து சிவபூமி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.



# தேசிய அணிக்கான கதவுகளை பலமாகத் தட்டும் இளம் சிங்கம் ஷாருஜன்



இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் அவ்வப்போது சில அபூர்வ திறமைகள் பாடசாலை மட்டத்திலிருந்து நேரடியாக முதல்தர கிரிக்கெட்டிற்குள் நுழைந்து, ஆரம்பத்திலேயே முத்திரை பதிப்பதுண்டு. அந்த வரிசையில், கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியின் புதல்வன் சண்முகநாதன் ஷாருஜன் இன்று இலங்கை கிரிக்கெட் ரசிகர்களின் பேசுபொருளாக மாறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் மிகவும் சவாலான முறையில் நடத்தப்பட்டு வரும் பிரதான கழகங்களுக்கு இடையிலான மேஜர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று நிறைவடைந்துள்ள நிலையில், அனுபவம் வாய்ந்த பல வீரர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, ஓட்டங்கள் குவிப்பில் முதலிடத்தைப் பிடித்து ஷாருஜன் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஒரு வீரரின் திறமை என்பது அவர் எடுக்கும் ஓட்டங்களில் மட்டும் தங்கியிருப்பதில்லை, மாறாக அந்த ஓட்டங்கள் எந்த மாதிரியான சூழலில் பெறப்பட்டன என்பதில்தான் உள்ளது. தமிழ் யூனியன் கிரிக்கெட் அண்ட் அத்லெட்டிக் கிளப் அணிக்காக களம் காணும் ஷாருஜன், இவ்வருட பருவ காலத்தில் தனது அணியை பலமுறை இக்கட்டான நிலைகளில் இருந்து மீட்டெடுத்துள்ளார். மைதானத்திற்குள் நுழையும் போது ஒரு 19 வயது இளைஞனாகத்




தெரிந்தாலும், அவர் துடுப்பெடுத்தாடும் விதம் ஒரு முதிர்ச்சியடைந்த சர்வதேச வீரரை நினைவுபடுத்துகிறது. குறிப்பாக, விக்கெட்டுகள் அடுத்தடுத்து வீழ்ந்து அணி இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும் போது, பதற்றமடையாமல் பந்துகளைத் தெரிவு செய்து ஆடும் அவரது நுட்பம் வியப்பிற்குரியது.

இந்த பருவ காலத்தில் ஷாருஜன் படைத்துள்ள புள்ளிவிபரங்கள் மலைக்க வைக்கின்றன. இதுவரை 6 போட்டிகளில் விளையாடி 11 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடியுள்ள அவர், மொத்தமாக 559 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். இதில் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், மேஜர் லீக் கிரிக்கெட்டின் முதல் சுற்றில் 500 ஓட்டங்களை மொத்தமாக குவித்த ஒரே ஒரு வீரர் என்ற அரிய பெருமையை அவர் வசப்படுத்தியுள்ளார். 69.87 என்ற மிகச்சிறந்த சராசரியைக் கொண்டுள்ள அவர், 3 சதங்களையும் ஒரு அரைச் சதத்தையும் விளாசியுள்ளார். பதுரெலியா கிரிக்கெட் கிளப் அணிக்கு எதிரான தனது அறிமுகப் போட்டியிலேயே சதம் கடந்து, முதல்தர கிரிக்கெட் வாழ்க்கையை ஒரு சாதனையுடன் தொடங்கிய அவர், அதன் பின்னரும் தனது ஓட்ட வேட்டையை நிறுத்தவில்லை.

மேஜர் லீக் தொடரில் முதல் சுற்றில் அவர் எடுத்த முக்கிய ஓட்டங்கள்:

* 123 & 3 (எதிர்: பதுரெலியா CC)
* 60 (எதிர்: மூவர்ஸ் SC)
* 24 & 23* (எதிர்: BRC)
* 0 & 122* (எதிர்: குருநாகல் யூத் CC)
* 87 & 2 (எதிர்: NCC)
* 115 (எதிர்: பானந்துறை SC)

ஷாருஜனின் இந்த அபாரமான வளர்ச்சிக்கு அவரது பாடசாலைக் கால கிரிக்கெட் ஒரு பலமான அடித்தளமாக அமைந்தது. கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியில் தனது கிரிக்கெட் பயணத்தை ஆரம்பித்த அவர், மிகச் சிறிய வயதிலேயே



தனது திறமையை வெளிப்படுத்தினார். கல்லூரியின் 13, 15, 17 வயதுக்குட்பட்ட அணிகளில் தொடர்ச்சியாக விளையாடியதுடன், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கல்லூரி அணியின் தலைவராகப் பொறுப்பேற்று அணியை வழிநடத்தினார்.

ஒரு தலைவராக களத்தில் அவர் எடுத்த முடிவுகளும், நெருக்கடியான நேரங்களில் அவர் காட்டிய நிதானமும் இன்று தமிழ் யூனியன் அணிக்காக விளையாடும் போது அவருக்குக் கைகொடுக்கின்றன. பாடசாலை மட்டத்திலிருந்து நேரடியாகக் கழக மட்டத்திற்கு வரும் போது பல வீரர்கள் தடுமாறுவது வழக்கம், ஆனால் ஷாருஜன் அந்த மாற்றத்தை மிக இலகுவாகக் கையாண்டுள்ளார்.

சர்வதேச அனுபவத்தைப் பொறுத்தவரையில், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியின் முக்கிய வீரராக ஷாருஜன் அங்கம் வகித்தார். அந்தத் தொடரில் 5 போட்டிகளில் விளையாடி 118 ஓட்டங்களைப் பெற்றதுடன், விக்கெட் காப்பாளராகவும் தனது திறமையை நிரூபித்தார். 5 பிடிகளை எடுத்ததுடன், மின்னல் வேகத்தில் 2 ஸ்டம்ப்களையும் செய்து அசத்தினார். ஒரு விக்கெட் காப்பாளர் - துடுப்பாட்ட வீரராக (Wicket-keeper Batsman) அவர் கொண்டுள்ள இரட்டைத் திறமை, இலங்கை தேசிய அணிக்கு எதிர்காலத்தில் ஒரு சிறந்த சொத்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

நடப்புத் தொடரில் அவர் விளையாடிய ஒவ்வொரு போட்டியும் ஒரு பாடமாகவே அமைந்தது. பதுரெலியா அணிக்கு எதிரான முதல் போட்டியில் 123 ஓட்டங்களைக் குவித்த அவர், அடுத்தடுத்த போட்டிகளிலும் மூவர்ஸ் அணிக்கு எதிராக 60 ஓட்டங்களையும், குருநாகல் யூத் கிரிக்கெட் கிளப்பிற்கு எதிராக ஆட்டமிழக்காமல் 122 ஓட்டங்களையும் பெற்று தனது Consistency-ஐ நிலைநாட்டினார்.

குறிப்பாக நொண்டஸ்கிரிப்ட்ஸ் (NCC) போன்ற பலமான பந்துவீச்சைக் கொண்ட அணிக்கு எதிராக அவர் பெற்ற 87 ஓட்டங்கள், அவர் எத்தகைய தரமான பந்துவீச்சாளர்களையும் எதிர்கொள்ளத் தயார் என்பதை உணர்த்தியது.

இலங்கை கிரிக்கெட் தற்போது ஒரு மாற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில், ஷாருஜன் போன்ற இளம் வீரர்களின் எழுச்சி ஒரு புதிய நம்பிக்கையைத் தருகிறது. வெறும் அதிரடி ஆட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கிரிக்கெட்டின் அடிப்படை நுணுக்கங்களைச் சரியாகப் பின்பற்றி, இன்னிங்ஸைக் கட்டியெழுப்பும் ஷாருஜனின் பாணி பாராட்டுக்குரியது.

19 வயதிலேயே இவ்வளவு பெரிய சாதனைகளைப் புரிந்துள்ள அவர், இதே அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மிக விரைவில் இலங்கை தேசிய அணியின் நீல நிற சீருடையை அணிந்து சர்வதேச அரங்கில் ஜொலிப்பார் என்பதில் ஐயமில்லை. தமிழ் யூனியன் கழகத்தின் நம்பிக்கையாகவும், இலங்கை கிரிக்கெட்டின் அடுத்த நட்சத்திரமாகவும் சண்முகநாதன் ஷாருஜன் விஸ்வரூபம் எடுத்து வருகிறார்.

